முருகப்பெருமான் துணை

**மகான் தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.09.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. தவராஜனே ஆறுமுக அரங்கனே
   தருமனே உன் பெருமை கூறி
   அவனியில் சோபகிருது யாளி திங்கள்
   அறுநான்கு திகதி கதிரோன் வாரம்
2. வாரமதில் அறிவுரை ஆசி
   வழங்குவேன் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும்
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 24 ம் நாள், 10.09.2023, ஞாயிற்றுக்கிழமை)
   சோரமில்லா ஞான உலகு அமைய உரைப்பேன்
   சுத்தநெறி கொண்ட மக்கள்படை
3. படைகள் உலகெல்லாம் அமைய
   பண்புடன் அரங்கமகா ஞானியும்
   தடையற பிரணவக்குடில் படைத்து
   தக்க வழிகாட்டல் செய்துவர
4. வருகவே கலியுக மக்கள்
   வணங்கி ஞான தேசிகனின்
   திருவடி பற்றி தீட்சை ஏற்று
   தேசிகா என சரணாகதி கொண்டு
5. கொண்டுமே சேவை ஆற்றிட
   குருவரங்கன் தரும சாலையில்
   தொண்டாற்றி கிளைகள் அமைய
   தேசமெங்கும் பரப்பி வருக
6. வருகவே தரும சாலைகள் பெருக
   வள்ளல் தன்மை எங்கும் பரவி
   தரும சிந்தை கொண்ட மக்களாய்
   தயவே வடிவான நிலைகளாகி

7. ஆகியே உலகம் எங்கிலும்
அறம் நிறைந்த சமூகமாக
வகைபட ஆற்றல் பெருகி
வையகம் பாதுகாப்பை அடையும்
8. அடையவே அரங்கன் அவதாரம்
அற்புதம் உலகம் அறியப்பட
தடையான சகல அஞ்ஞான
தர்க்க எதிர்மறை அனைத்தும்
9. அனைத்தும் விலகி மாற்றம்
அமைதி பாதுகாப்பு வளர்ச்சி
இணையிலா ஞானத் தலைமை
எல்லோரையும் காக்கும் வண்ணம்
10. வண்ணமுடன் உருவாகி இனிதே
வையகம் ஞான ஆட்சியாக
அண்ணல் துணைபட அமையும்
அன்னதனால் உலக மக்கள்
11. மக்களெல்லாம் அரங்கன் மார்க்கம்
மரணம் வெல்லும் மார்க்கமாக
ஆக்கமுடன் சிறந்து வாழவே
அபயமென ஏற்றுவர வேணும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—